**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 26.02.2026

அசல் வழக்கு எண். 154/2022

வா.சா. 2 – பொற்கொடி, க/பெ. வேலன்

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

சாமுவேல் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான்கு பேர். உங்கள் தாத்தா சண்முகம் என்பவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மூன்று பேர். கஸ்தூரி என்பவர் காலம் ஆகிவிட்டார் என்றால் சரிதான். அவர்களுடைய வாரிசுதாரர்கள் யார் தெரியுமா என்றால் தெரியும் தரணி, கார்த்திக், பிரவீன் ஆகிய மூன்று பேர் ஆவர்கள். கஸ்தூரி என்பவர் காலமான பிறகு அவரது வாரிசுகளை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். உங்கள் சின்ன தாத்தா துரை உயிருடன் இருக்கிறாரா என்றால் இல்லை. அவருடைய வாரிசுதாரர் யார் என்றால் ஒருவர் இறந்துவிட்டார், நிர்மலா, பாலகிருஷ்ணன், அருணகிரி, சரிதா ஆகியோர் இருக்கிறார்கள். அவர்களை இந்த வழக்கில் வாரிசுதாரர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான் ஏன் சேர்க்கவில்லை என்றால் தெரியாது. என்ன காரணத்திற்காக வரதம்மாள் என்பவரை முதல் பிரதிவாதியாக சேர்த்தீர்கள் என்றால் தெரியாது. பெரிய தாத்தா பொன்னையா எங்கு வசித்து வந்தார் அவருடைய வாரிசுகள் எங்கு வசிக்கிறார்கள் என்றால் கடம்பத்தூரில் இருக்கிறார்கள். பொன்னையாவின் வாரிசுகள் யாராவது ஆட்டு புத்தூரில் வசிக்கிறார்களா என்றால் இல்லை. 24.01.1958 அன்று வழக்கு சொத்தினை சாமுவேல் என்பவர் கிரயம் வாங்கிய விஷயம் தெரியுமா என்றால் சித்தப்பா சொல்லி தெரியும். 02.03.1960 அன்று அந்த சொத்தை சையது முகமது பாஷா சாஹிப் என்பவருக்கு விற்பனை செய்து விட்ட

விவரம் தெரியுமா என்றால் விற்பனை செய்தது தெரியாது அடகு வைத்தது தெரியும். நீங்கள் கூறுவது போல் வழக்கு சொத்து பூர்வீக சொத்து இல்லை என்று சொன்னால் சரியில்லை. சாமுவேல் என்பவரிடம் கிரயம் பெற்ற சையது முகமது பாஷா சாதிக். அவரது மனைவி இடம் இருந்து முதல் பிரதிவாதி வரதம்மாள் கிரையம் வாங்கி வீடு கட்டி ஆண்டு அனுபவித்து வந்ததின் அடிப்படையில் முதல் பிரதிவாதி வரதம்மாள் என்பவருக்கு கிராம நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் அந்த இடம் காலியாக தான் இருக்கிறது வீடு கட்டவில்லை. பட்டா வந்தது தெரியுமா என்றால் இப்பொழுது தான் தெரியும். உங்களுக்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியில்லை.

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram